## சஃஈ செய்யும்போது ஓதவேண்டிய துஆ

சஃஈ செய்யத்துவங்கும்போது இந்த துஆவை ஓதவேண்டும்:

إِنَّ الصَّفَا والْمَرْوَةَ مِنْ شَعَائِرِ اللهِ، أَبْدَأُ بِمَا بَدَأَ اللهُ بِهِ

பொருள்: *நிச்சயமாக ஸஃபாவும் மர்வாவும் அல்லாஹ்வின் அத்தாட்சி அடையாளங்களாக இருக்கின்றன, நானும் அல்லாஹ் எதனை முதலில் கூறியிருக்கின்றானோ அதனைக்கொண்டே துவங்குகிறேன் (முஸ்லிம்).*

ஸஃபா மற்றும் மர்வாவின் ஒவ்வொரு சுற்றிலும் ஃகிப்லாவை நோக்கி நின்று அல்லாஹ்வைப் புகழ்ந்து துதித்து, தஸ்பீஹ் மற்றும் தஹ்லீல் சொல்லி இந்த துஆவை ஓதுவது சுன்னத்தான முறையாக இருக்கின்றது. இதனைச் செய்யும் முறையானது முதலில் மூன்று முறை اللهُ أَكْبَرُ என்று சொல்லி அதன்பின் இந்த துஆவை ஓதவேண்டும்.

لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ، لَهُ المُلْكُ وَلَهُ الحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ، لاَ إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَه أَنْجَزَ وَعْدَه ، وَنَصَرَ عَبْدَه، وَهَزَمَ الأَحْزَابَ وَحْدَه

பொருள்: *அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது, புகழ் அனைத்தும் அவனுக்கே, அவன் எல்லாவற்றின் மீதும் வல்லமையும் ஆற்றல் மிக்கவனாகவும் உள்ளான். அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, அவன் தனித்தவன், அவன் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றிவிட்டான், தன்னுடைய அடியானுக்கு உதவியும் புரிந்துவிட்டான், மற்றும் (நிராகரிக்கும்) கூட்டத்தினர் அனைவரையும் அவன் தனியாகவே தோல்வியுறச் செய்தும்விட்டான் (முஸ்லிம்).*

www.uzairfalahi.com

ஸஃபா மற்றும் மர்வாவிற்கு இடையே நடந்து செல்லும்போது ஓதவேண்டிய துஆக்கள் என்று எதுவுமே கூறப்படவில்லை. இருப்பினும், நபித்தோழர்களான சிலர், உதாரணமாக, ஹஜரத் அலி (ர), ஹஜரத் அப்துல்லாஹ் பின் உமர் (ர) மற்றும் ஹஜரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ர) அகியோர் இந்த துஆவை ஓதியதாகக் கூறப்படுகின்றது:

رَبِّ اغْفِرْ وَارْحَمْ، وَأَنْتَ الأَعَزُّ الأَكْرَمُ

பொருள்: *என் இரட்சகனே, என்னுடைய பாவங்களை மன்னித்தருள்வாயாக, கருணை புரிவாயாக, நீயே மிகுந்த கண்ணியத்திற்குரியவனும் பெருமைக்குரியவனுமாய் இருக்கின்றாய். (நூலாசிரியர்: அபூ ஷைபா)*

இதனைத்தவிர, ஃகுர்ஆன், ஹதீத்ஸ்களில் காணப்படும் மற்ற துஆக்களையும் ஓதலாம்

* * *